**மாவட்ட தொழில் மையத்தின் மூலம் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 67 நபர்களுக்கு 2015-2016 நிதியாண்டிற்கு கடன் வழங்க விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றது - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

குறு ,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை கொள்கை 2008ன் கீழ் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கும் ,சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கும் நோக்குடன் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 67 நபர்களுக்கு மாவட்ட தொழில் மைய்த்தின் மூலம் 2015-2016 ஆம் நிதியாண்டிற்கு கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் திருவாரூர் மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது.இதில் பயன்பெற குறைந்தப்பட்சம் 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் அதிகபட்சம் 35 வயதுக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மிகவும் பிற்ப்படுத்தப்பட்டோர்,பிற்ப்படுத்தப்பட்டோர் .சிறுபான்மையினர் ,முன்னாள் இராணுவத்தினர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோருக்கு 45 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.விண்ணப்பத்தாரரின் ஆண்டு குடும்ப வருமானம் ரூ.1 லட்சத்து 50 ஆயிரத்திற்குள் இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி நிறுவனங்களுக்கு அதிகபட்ச தொழில் கடனாக ரூ.5 லட்சமும் ,சேவை சார்நத தொழில்களுக்கு ரூ.3 லட்சமும் மற்றும் வியாபாரத்திற்கு ரூ.1 லட்சமும் வங்கிகள் மூலமாக 25 % மானியத்துடன் கடனாக வழங்கப்படும்.வாகனக் கடன் நேரடி விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த தொழில்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் பெற இயலாது.படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் தொழில் துவங்க விரும்புபவர்கள் 426 மாவட்ட பெருந்திட்ட வளாகம் ,விளமல் ,திருவாரூர் 610004 என்ற முகவரியில் உள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகத்தில் இலவசமாக விண்ணப்பங்கள் பெற்று விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்**